IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**OS.No.142/2022**

**நாள்– 30.03.2023**

**மாரித்தாய்**

**வா.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னுடைய தகப்பனார் பெயர் கே.வி.போத்திநாயக்கர் என்றால் சரிதான். அவருக்கு முதலில் ரெங்கம்மாள் என்பவரை திருமணம் செய்திருந்தார்கள். ரெங்கம்மாளுக்கு ஒரே ஒரு பெண் குழந்தை. அவர் பெயர் கெங்கம்மாள் ஆகும். கெங்கம்மாள் சிறுவயதாக இருக்கும் போதே அவரது தாயார் ரெங்கம்மாள் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். ரெங்கம்மாள் காலமான பின்பு போத்திநாயக்கர் அவருடைய சகோதரியான சுப்புலட்சுமியம்மாள் என்பவரை 2வதாக திருமணம் செய்திருக்கிறார் என்றால் சரிதான். கே.வி.போத்திநாயக்கர்–சுப்புலட்சுமியம்மாளுக்கு 3 பெண் குழந்தைகள், 2 ஆண்குழந்தைகள் என்றால் சரிதான். அந்த 2 ஆண்குழந்தைகள் தான் இந்த வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். அந்த 3 பெண் குழந்தைகள் நானும், 5, 6 பிரதிவாதிகளும் ஆவோம் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனாரின் முதல் தாரத்து மகளான கெங்கம்மாள் என்பவருக்கு 8 குழந்தைகள் என்றால் சரிதான். இந்த வழக்கின் 3, 4 பிரதிவாதிகள் மற்றும் 7 முதல் 12 பிரதிவாதிகள் கெங்கம்மாளின் குழந்தைகள் ஆவார்கள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியை எனது சகோதரரான 1ம் பிரதிவாதி திருமணம் செய்திருக்கிறார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியை என்னுடைய மற்றொரு சகோதரர் திருமணம்

செய்திருக்கிறார் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் கே.வி.போத்திநாயக்கர் 1988 ம் ஆண்டு இறந்துவிட்டார். என்னுடைய தகப்பனார் உயிருடன் இருக்கும் போதே முதல் தாரத்து மகளான கெங்கம்மாளுக்கும் எனக்கும் இவ்வழக்கின் 5 ம் பிரதிவாதிக்கும் திருமணம் நடந்தது என்றால் சரிதான். 6 ம் பிரதிவாதிக்கு என்னுடைய தகப்பனார் இறந்தபிறகு திருமணம் நடந்தது என்றால் சரிதான்.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.03.30 17:20:10 +0530